முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1558

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.01.2024,** வியாழக்கிழமை

1. கலிதனை வெல்ல வந்த குரு ராஜா
   கலியுக மக்களுக்கு பாதுகாப்புத் தர
   அழியாமை எனும் ஞானம் அருளிவந்த
   ஆறுமுக அரங்கமகா தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 19 ம் நாள், 04.01.2024, வியாழக்கிழமை)
   ஆசிதந்து உன்னுள் யான் இருந்து
   அகிலத்தார்க்கு ஞானம் அருளிவர
3. வருகவே ஞானிகள் பூஜையாக
   அரங்கன் நீ நடத்துகின்ற முழுமதி பூஜை
   தானவான்கள் பெருகி இந்த தரணி எங்கும்
   தக்கபடி ஞானிகள் உருவாகவேண்டும் என
4. என ஆறுமுகன் யான் நடத்தும்
   உயர்வான பூஜை ஆகும்
   ஞானம் தேடி அலைபவர்கள் அரங்கனை நோக்கி
   நம்பிக்கைக் கொண்டு முழுமதியினில் வந்து சென்றால்
5. சென்றவர்க்கெல்லாம் சித்திகள் கைகூடும்
   சிறப்பறிவு ஞானபலம் உண்டாகி
   சிந்தை தெளிவோடு சர்வபலமும்
   செப்பிடுவேன் இந்த கலியுகத்தில் அடைந்து சிறப்பர்
6. சிறக்கவே மகா சக்தியாக வானவர் கூட்டம்
   செப்பிடுவேன் அரங்கன் குடிலை அலங்கரித்து வர
   வருகவே ஓங்காரக்குடில் நோக்கி வையகத்தார்
   தொடர்பு கொண்டு வாழ்ந்தால் போதும்

7. வாழ்பவர்க்கெல்லாம் இனி பிறவா பேறு
வரமாக அரங்கன் கரம்பட தீட்சையாக இறங்கி
இறங்கியே சுத்திகள் நடந்தேறும்
எங்கும் தர்மஞான ஆட்சிக்காலமாக
8. சிந்தைபட சக்தியாக ஆறுமுகன்
செப்பிடுவேன் அரங்கன் தொண்டர்படை வழி
இறங்கி அற்புதத்தை நடத்தி அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—